மாதம் இரு முறை வெளிவரும் இலவச இதழ், 16 ஏப்ரல் 2007 - 29 ஏப்ரல் 2007, குரல் 14

# லண்டன் குரல்

Voice of London Tamils

## காலத்தால் அழியாத வரலாற்றுக் கறை

## லண்டனில் ரெலோ படுகொலையின் 21வது நினைவு நிகழ்வு



ஆண்டுகளுக்கு முன் 1986 மே 6ல் படுகொலை ப்பட்ட ரெலொ: தமிழீழ விடுதலை இயக்கத்தின் வர் சிறி சபாரத்தினத்தின் நினைவு தினம் 6ல் லண்டன் ஹெரான்வே ஹோலில் ஏற்பாடு ப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்ட ற்றில் இரத்த ஆறு ஓடிய காலமாக இது ந்தது. தமிழீழ விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஒரு வார திற்குள் தமது சகோதரர்களினாலேயே படுகொலை ப்பட்டனர். படுகொலை செய்யப்பட்டவர்களில் பாலானோர் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள்.

தே போன்ற சம்பவம் 2004 ஏப்ரல் 10ல் வெருகல் ற ஓட்டி இடம்பெற்றது. அதில் 175 பேர் வரை ாலை செய்யப்பட்டதாகவும் அதிலும் இறந்தவர்கள் வரும் மட்டக்களப்பைச் ( தொடர்ச்சி 7ம் பக். )

பெற்றோல் நிலையங்களின் காட் மோசடி அம்பலம் பக்.2
கிரிக்கெட் அரசியல்: விதிகளின் படி விளையாடுங்கள் பக்.3
ஒடுக்கப்பட்டோருக்கு தோள் கொடுத்த சுந்தரமூர்த்தி பக்.4
மார்க்சின் பேரப் பிள்ளைகளும் புலி எதிர்ப்பும் பக்.6

# அம்பாளின் ஏஜென்டுகளாகும் ரஸ்டிகளும் ரஸ்டிகளின் கிடுக்குப் பிடியில் அம்பாளும்

## தவறான காரணங்களுக்காக பிரபல்யம் அடைகிறது ஈலிங் அம்மன் ஆலயம்.

சரிற்றி கொமிஷனின் அழுத்தத்திற்கு பணிந்து ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தை ஏப்ரல் 21ல் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய ரஷ்டிகள் கூட்டியுள்ளனர். இது தொடர்பாக திருமதி பவான், யோகநாதன், டொக்டர் பரமநாதன் ஆகியோர் சரிற்றி கொமிஷனுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இவர்களுக்கும் தற்போதைய செயற் குழுவுக்கும் பதிலளித்துள்ள Senior Specialist Casework Manager, Victoria Crandon, தற்போதைய செயற்குழுவின் நியமனம் முறையானதல்ல என்று தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக சரிற்றி கொமிசன் கனக துர்க்கை அம்மன் ஆலய ரஷ்டிஸ்களுக்கு (Board of Trustee) மார்ச் 13ல் எழுதிய கடிதத்தில் செயற்குழுவை கலைப்பதற்கான தகுந்த காரணங்கள் எதனையும் ரஷ்டியினர் வழங்கவில்லை எனத் தெரிவித்திருந்தது. எஸ் கருணலிங்கம் தலைமையிலான செயற்குழுவை கலைப்பதற்கு ஆலயத்தின் ரஷ்டியினருக்கு அந்த அதிகாரம் இருப்பது பற்றி தமக்கு தொடர்ந்தும் சந்தேகம் இருந்ததையும் சரிற்றி கொமிஷன் சுட்டிக்காட்டி இருந்தது.



லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தால் பராமரிக்கப்பட்ட மலையக சிறுவர் இல்லம்

சரிற்றி கொமிஷனின் முடிவை தொடர்ந்தும் ஏற்க மறுத்துவந்த ஆலய ரஷ்டிகள் தொடர்ந்தும் தங்களால் முறைமைகளுக்கு மாறாகத் தெரிவு செய்யப்பட்ட செயற்குழுவை மேலும் ஓரிரு ஆண்டுகளுக்கு நீடிக்க பொதுக் குழுக் கூட்டத்தில் அனுமதி கேட்க முற்பட்டனர். அதற்கு ஆணித்தரமாக மறுப்புத் தெரிவித்த Victoria Crandon, ஏப்ரல் 11ல் ரஸ்டிகளுக்கும் செயற்குழுவுக்கும் அனுப்பிய மடலில் ".... we are not prepared to continue to debate whether the appointments were for 1 or 2 years because we believe that the appointment themselves were flawed.", (இந்த நியமனங்கள் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கா என்று தொடர்ந்தும் விவாதிப்பதற்கு நாங்கள் தயாரில்லை ஏனென்றால் இந்த நியமனங்களே முறையற்றது என நாங்கள் நம்புகிறோம்.) என்று தெரிவித்து உள்ளார்.

இதற்கும் மேல் ஒரு படி சென்று புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்ட பின் தெரிவு செய்யப்படுபவர்கள் தற்போதுள்ள ரஸ்டிகள் குழு, செயற்குழு, பொதுக்குழு என்ற குழப்பமான நிர்வாக முறையை யாப்பை மாற்ற வேண்டும் என தாங்கள் எண்ணுவதாக Victoria Crandon, ஏப்ரல் 13ல் எழுதிய மடல் ஒன்றில் தெரிவித்துள்ளார். இக்கருத்துகளுக்கு ரஷ்டித் தலைவர் தேவசகாயம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

( தொடர்ச்சி 7ம் பக்கத்தில் )



FSA அங்கீகாரத்துடன் அபிமானம் பெற்ற வங்கிகளுடன் இணைந்து
தனிப்பட்ட மற்றும் வியாபார நோக்கங்களுக்கான
'காட்' மூலமான துரித பணமாற்றுச் சேவை
குறைந்த செலவு & குறைந்த சிரமம்
0% கொமிஷன், ஒரு தடவை ATM மூலமாக பணம் பெற்றுக் கொள்வதற்கான செலவு £2.25 மட்டுமே. உலகெங்கும் 1,000,000 ATM இயந்திரங்கள் மூலமாக வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் துரித சேவை.
உங்கள் 'காட்' மற்றும் pin இலக்கத்தைப் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள் 0208 871 0485.
விநியோகஸ்தர்கள் UK முழுவதிலும் தேவை.
மேலதிக தகவல்களுக்கு 0207 871 0485.

உண்மைகள் உறங்குவதில்லை.

16 ஏப்ரல் 07 - 29 ஏப்ரல் 07, குரல் 14

லண்டன் குரல்

## இன உறவுகளை விரிசலாக்கும் உள்துறை அமைச்சர்

பிரித்தானிய அரசாங்கம் அணு குண்டு தயாரிப்பதற்காக பல பில்லியன் பவுண்களை அண்மையில் ஒதுக்கியுள்ளது. நேரடியாகவும் மறைமுகமாகவும் வரி, அபராதம் என மக்களிடம் பணம் பறிக்கும் இவர்கள் ஆட்சியின் கீழ் 3 இல் 2 பங்கு குழந்தைகள் வறுமைக் கோட்டின் கீழ் வாடுகிறார்கள். பெரும்பாண்மை வறிய மக்களுக்கும் சிறுபான்மை முதலாளிகளுக்கும் இடையிலான தூரமும் வெப்பமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்பட்டு வேலையற்றுத் தவிக்கும் இங்கிலாந்து தொழிலாளர்களை சமாதானப்படுத்தி மழுங்கடித்து வைத்திருக்க ஆதிக்க சக்திகள் முயன்று வருகின்றன.

டெய்லி மெயில் போன்ற வலதுசாரி பத்திரிகைகள் நாட்டில் இடம்பெறும் எதிர்மறையான விளைவுகளுக்கு எல்லாம் இந்த வெளிநாட்டு தொழிலாளர்களை சுட்டிக் காட்டுகிறது. 40 பில்லியனுக்கு மேல் போனஸ் எடுக்கும் கதைகளை இவர்கள் முன்னிலைப்படுத்த மாட்டார்கள். அப்படி காசு உழைப்பது அவர்களின் கெட்டித்தனம் என்று கூறுவார்கள். இதை விட வெளிநாட்டுத் தொழிலாளர்களை, வெளிநாட்டுக்காரர்களை குறிப்பாக ஆசிய, ஆபிரிக்கரை சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறார்கள். இதனால் தான் இன உரசல்களும் அடிபாடுகளும் அண்மையில் அதிகரித்து வந்துள்ளது.

சாப்பாட்டுக்கு வழியற்று எவ்வளவு சம்பளத்துக்கும் வேலை செய்யத் தயாராக இருக்கும் இந்தத் தொழிலாளர்களை சுரண்டுவதால் முதலாளித்துவம் சம்பள உயர்வை மட்டுப்படுத்தி சம்பளத்தையும் வேலை நேரத்தையும் கட்டுப்படுத்தி லாபத்தை மேலும் அதிகரிக்கிறது. இந்த முதலாளிகளை தாக்காமல் உள்துறை அமைச்சர் ஜோன் ரீட் தொழிலாளர்கள் மீது குற்றம் சுமத்துகிறார் பழிபோடுகிறார். இதனால் பாதிக்கப்படும் மற்றைய சக தொழிலாளர்களுக்கு வெறுப்பு வருவதும் உரசல் ஏற்படுவதும் இயற்கையாக நிகழ்கிறது.

ஆசிரியர்: த ஜெயபாலன்
ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார், ஜோ ஜெயவேந்தன்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 079 1944 4994

‘லண்டன் குரல்’ பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் ‘லண்டன் குரல்’ பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

**504.8 மில்லியன் பவுண் கிறடிட்காட் மோசடி பிரித்தானியாவில் சென்றவருடம் இடம்பெற்று உள்ளது.**

## கிறடிட் காட் மோசடி: பெற்றோல் நிலைய தமிழர்கள் மீது குற்றச்சாட்டு

பிரித்தானிய பெற்றோல் நிலையங்களில் திட்டமிட்டு நடைபெறும் கிரடிட்காட் மோசடிகள் பயங்கரவாதத்திற்கு துணை போவதாக பிரித்தினியாவில் உள்ள இலங்கைத் தூதராக செயலர் மக்ஸ்வல் ஹீகில் குற்றம்சாட்டியுள்ளார். இலங்கை அரசு வழங்கிய இக்குற்றச்சாட்டை தாம் முக்கியத்துவம் அளித்து நோக்குவதாக பிரித்தானிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் மாக்கிரட் பெக்கிற் (படம்) தெரிவித்து உள்ளார். ஏப்ரல் 19ல் பிபிசி றேடியோ 4ல் மாலை 6 செய்தியில் நிருபர் கரன் கொகன் இச்செய்தியை வழங்கி இருந்தார்.





பிரித்தானியாவில் இடம்பெறும் கிரடிட் காட் மோசடிகள் பெரும்பாலும் பெற்றோல் நிலையங்களுடனேயே தொடர்புபட்டு உள்ளதாகவும் இங்குள்ள 20 பொலிஸ் பிரிவுகள் பெற்றோல் நிலையங்களையே முக்கியமாக அடையாளம் கண்டுள்ளது. ஏனைய நிறுவனங்களில் இம்மோசடிகள் மிகக் குறைவாகவே உள்ளது. பிரித்தானியா முழுவதும் இடம்பெறும் கிரடிட் காட் மோசடிகளை ஆராய்ந்தால் அவை பெற்றோல் நிலையங்களையும் குறிப்பாக இலங்கைத் தமிழர்களையுமே தொடர்புபடுத்துவதாக அச்செய்தி கூறுகிறது.

மக்ஸ்வல் ஹீகில் (படம்) இது பற்றி கருத்து வெளியிடுகையில் திட்டமிட்ட இந்த மோசடிகளும் வி.புலிகளுக்கு நிதி சேகரிப்பதும் இலங்கையில் பயங்கரவாதத்திற்கு உதவுகிறது என்றும் இது பற்றி நீண்டகாலமாக இலங்கை அரசு குற்றம்சாட்டி வந்த போதும் பிரித்தானிய அரசு கவனம்மெடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க பொலிஸ் பிரிவுகள் தற்போது பணிக்கப்பட்டு உள்ளன. பிரித்தானிய தமிழர்கள் சர்வதேச கிரடிட் காட் மோசடியில் பிடிபட்டு தாய்லாந்து, இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சிறை வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இம்மோசடிகள் தனிநபர் நடவடிக்கை யாக அல்லாமல் வி.புலிகளுடன் சம்பந்தப் படுத்தப்படும் போக்கு அண்மைக்காலமாக அதிகரித்து உள்ளது. இதுவரை இந்தக் குற்றச்சாட்டு சட்டரீதியாக நிரூபிக்கப்படவில்லை. ஆனால் மோசடியில் ஈடுபடுபவர்கள் தங்களை நியாப்படுத்துவதற்காக வி. புலிகள் மீது பழிபோடும் போக்கு நீண்டகாலமாகவே இருந்து வருகிறது.

## கைது செய்யப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நிருபிப்பது பிரான்ஸ் பொலிஸாருக்கு கடினமாகிறது

பிரான்ஸில் ஏப்ரல் முதலாம் திகதி கைது செய்யப்பட்ட வி.புலிகளது ஆதரவாளர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நிருபிப்பதில் பிரான்ஸ் பொலிஸார் சங்கடங்களை எதிர் நோக்குகின்றனர். பெரும்பாலானவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நிருபிக்க முடியாது போகலாம் என பிரான்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலும் கைது செய்யப்பட்ட வர்கள் மீது சுமத்தப்பட்டு உள்ள குற்றச்சாட்டு பயங்கரவாத அமைப்பிற்கு நிதி சேகரித்தனர் என்பதே. ஆனால் நிதி வழங்கியவர்கள் யாரும் கைது செய்யப்பட்டவர்கள் எவரும் பலவந்தமாக நிதி சேகரித்ததாக குற்றம்சாட்டவில்லை. மேலும் அவர்கள் வி.புலிகளுக்காக என்று கேட்டு நிதி வசூலித்ததாகவும் யாரும் குற்றம்சாட்டவில்லை.

பிரான்ஸில் நிதி சேகரிப்பவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்காகவே நிதி சேகரிப்பில் ஈடுபட்டதாக தெரிவித்து உள்ளனர். நிதி வழங்கியவர்களும் அல்லலபடும் தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காகவே நிதி வழங்கியதாகத் தெரிவித்து உள்ளனர். லாச்சப்பலில் வியாபார நிலையங்களை வைத்துள்ள 130க்கும் அதிகமான வர்த்தகர்கள் தாங்கள் தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்காக சொந்த விருப்பின் பேரில் வழங்கியதாகவும் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும் படி கோரியும் உள்ளனர்.

இந்நிலையில் பயங்கரவாத அமைப்பிற்கு பணம் சேகரித்தார்கள் என்ற குற்றச்சாட்டை பிரான்ஸ் சட்டத்தின்படி நிரூபிப்பதற்கான வாய்ப்புகள் அரிதாகவே தென்படுவதாக பிரான்ஸில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லண்டனில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீது சரிற்றி கொமிஷன் எடுத்த நடவடிக்கை பிரான்ஸ் பொலிசார் எடுத்த நடவடிக்கையிலும் பார்க்க சட்டரீதியாக பலமானதாக இருந்தும் பிரித்தானிய சரிற்றி கொமிஷனால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு வழங்கப்பட்ட நிதி பயங்கரவாத நோக்கங்களுக்கு சென்றது என்பதை நிரூபிக்க முடியவில்லை. இறுதியில் அது முகாமைத்துவச் சீர்கேடு எனக்கூறி சரிற்றி கொமிஷன் பைலை மூடியது. லண்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீண்டும் இயங்க 2005ல் அனுமதிக்கப்பட்டது. ஆயினும் அதனுடைய பெயர் ஏற்கனவே சிக்கலுக்கு உள்ளாக்கப்பட்டதால் தொடர்ந்தும் அதே பெயரில் இயங்க சம்பந்தப்பட்டவர்கள் ஆர்வம் காட்டவில்லை.

ஆனால் பிரான்ஸில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ஒரு சரிற்றி அமைப்பு. அந்த அமைப்புக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுவதோ அல்லது நிதி வழங்குவதோ எந்த வகையிலும் ஒரு குற்றமாகாது. மேலும் கைது செய்யப்பட்டவர்கள் பிரான்ஸிற்கு வருமுன் வி.புலிகளில் இருந்திருந்தால் அதுவும் ஒரு குற்றமல்ல. அவர்கள் அரசியல் தஞ்சம் கோரியதே அந்த அடிப்படையில் தானே.

கைது செய்யப்பட்டவர்கள் யாரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதை அல்லது பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதை நிரூபிக்க முடிந்தால் மட்டுமே கைது செய்யப்பட்டவர்கள் சிக்கலுக்கு உள்ளாவார்கள். கைதானவர்கள் மீது அவ்வாறான குற்றச்சாட்டுகள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை.

முற்றுகையிடப்பட்ட சில இடங்களில் இருந்து பெரும் தொகையான பணமும் 175 கிலோகிராமுக்கும் அதிக எடையான தங்கமும் கைப்பற்றப்பட்டு உள்ளமை சம்பந்தப்பட்டவர்களின் நிதி முகாமைத்துவ அறிவின்மையையும் ஒழுங்கீனத்தையுமே காட்டுகிறது. அதற்காக அவர்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்க பிரான்ஸ் சட்டம் இடமளிக்காது.

நிதி வழங்கிய வியாபார நிலையங்க ளின் உரிமையாளர்களை வருமான வரி மற்றும் கடை வைத்தக் கொண்டு அரச உதவிகளை எடுத்தது என்ற சில்லறை விடயங்களுக்கு மேல் எதுவும் செய்ய முடியாது.

கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரி மக்களை கூப்பிட்டு கோஷம் போட வைப்பதிலும் சிறந்த சட்ட நிறுவனங்களை அமர்த்தி சட்டத்தின் ஓட்டைகளைத் தேடுவதே கைதானவர்களுக்கு மிகவும் பயனுள்ள தாக இருக்கும்.

முட்டாள்கள் தினமான ஏப்ரல் முதலாம் திகதி இடம்பெற்ற கைதுகள் எவ்வாறு முடியும் என்பது மூன்று மாத தடுப்பு காவல் காலத்திற்குள் தெரியவரும். இது கைது செய்தவர்களின் முட்டாள் தனத்தால் இடம்பெற்றதா அல்லது கைது செய்யப்பட்டவர்களின் முட்டாள் தனத்தால் இடம்பெற்றதா என்பது சட்டத்தின் சந்து பொந்துகளை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்தது.

பாரிஸில் மூன்று அரசியல் படுகொலை கள் இடம்பெற்று பல ஆண்டுகளாகியும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தாத பிரான்ஸ் அரசு இப்போது முட்டையில் மயிர் பிடுங்க முற்பட்டிருக்கிறது. இது வி.புலிகளின் ஆதரவு சக்திகளுக்கு எதிரான ஒரு சிறு மிரட்டல் என்பதற்கு அப்பால் எதுவும் இல்லை என்றே நம்பப்படுகிறது.

70,000 பேர் வரை இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை உயர்கிறது. ஆனால் இது உண்மையான தொகையைக் காட்டிலும் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளதாக எண்ணப்படுகிறது.

# கிரிகெட் அரசியல்: விதிகளின் படி ஆடுங்கள்

ஏப்ரல் 28ம் திகதி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளையொட்டி 'Sri Lanka! Play by the Ruels' என்ற தலைப்பிலான போராட்டம் ஒன்றை சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கொள்ள ஏற்பாடு செய்ததை இலங்கை அரசு வன்மையாகக் கண்டித்து உள்ளது. இலங்கையின் நற்பெயரையும் இலங்கை கிரிக்கட் சபையையும் அவமானப்படுத்தும் வகையில் இது செய்யப்படுவதாக இலங்கை தனது கண்டனத்தை தெரிவித்து உள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மேற்கு நாடுகளில் உள்ள அமைப்புகள் மேற்கு நாடுகளில் மனித உரிமைகள் எதுவும் நடைபெறாதது போல் மேற்கு நாடுகள் இல்லாத இலங்கை போன்ற நாடுகளின் மனித உரிமைகள் பற்றியே பிரச்சாரம் செய்வதாக ஏப்ரல் 17ல் அரச சார்புப் பத்திரிகையான டெய்லி நியூஸ் காரசாரமான கட்டுரையை வெளியிட்டு உள்ளது.



கிரிக்கெட்டில் அம்பயர் அல்லது றெப்றியைப் போல் இலங்கையில் சுயாதீன மனித உரிமைக் குழுக்கள் சுயாதீனமாக இயங்க இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மற்றும் ஆயுதக் குழுக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோரி உள்ளது. அரசும் புலிகளும் மற்றும் குழுக்களும் விதிமுறைகளுக்கு அமைய செயற்பட வேண்டுமென அக்கோரிக்கையில் கேட்கப்பட்டு உள்ளது.

இந்த சுயாதீன மனித உரிமை அமைப்புகளை சுயாதீனமாக நடுவர்களாக இயங்க அனுமதிப்பதன் மூலம் முரண்பாட்டில் சம்பந்தப்பட்டவர்கள் விதிமுறைகளை மீறுவதைக் கட்டுப்படுத்தலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை கருதுகிறது. அரசு, புலிகள், மற்றும் குழுக்கள் புரியும் மனித உரிமை மீறல்களைப் பதிவு செய்வது, அதனை பிரச்சாரப்படுத்துவது, சம்பந்தப்பட்டவர்களை நீதிக்கு முன் நிறுத்துவது போன்ற நடவடிக்கைகள் மூலம் மனித உரிமை விதிகளுக்கு அமைய சம்பந்தப்பட்டவர்களை செயற்பட வைக்க முடியும் என சர்வதேச மன்னிப்புச் சபை கருதுகிறது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இப்பிரச்சாரத்திற்கு எதிராக பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தூதராலயத்தின் ஆதரவுடன் இயங்கும் Campaign for Peace & Unity in Sri Lanka CPUSL என்ற அமைப்பு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை மார்ச் இறுதியில் நடத்தி இருந்தது.

தங்களது போராட்டம் இலங்கையை யோ அல்லது இலங்கை கிரிக்கட் குழுவையோ அவமதிப்பதல்ல என்பது அங்கு வருபவர்களுக்கு நிச்சயம் தெரியும் எனத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை தாங்கள் இலங்கை அரசை மட்டுமல்ல வி.புலிகளையும் விதிகளின் படி நடக்கும் படி கோரி உள்ளதையும் சுட்டிக்காட்டி உள்ளது.

கிரிக்கெட் பந்துகளில் கையெழுத்துக் களைப் பெற்று அதன் வீடியோ, மற்றும் புகைப்படங்களை இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் காண்பித்து அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிக்கிறது.

இலங்கை அணி அரை இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ள நிலையில் அவர்கள் உலகக் கிண்ணத்தை மீண்டும் வெல்வதற்கான எதிர்பார்ப்புகள் இலங்கையில் அதிகரித்து உள்ளது. இந்நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் இப்பிரச்சாரப் போராட்டம் சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நன்மதிப்பை மிகவும் பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேசத்தின் கவனத்தில் இருந்து மறக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் பற்றிய ஒரு கவனத்தை இது ஈர்க்கும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

மேலும் சிறுபான்மை இனங்களுக்கு மிக ஆபத்தான நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறியுள்ளதை ஐ நா சபையில் Minority Rights Group International, மார்ச் 27ல் வெளியிட்ட 'State of the World's Minorities' அறிக்கையில் தெரிவிக்கிறது. முன்னைய ஆண்டில் 47வது இடத்தில் இருந்த இலங்கை 2007ல் ஆபத்தான முதல் இருபது நாடுகளுக்குள் அடக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கிரனெடாவில் புலிக்கொடி



பிரசித்தி பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க சிலர் ஸ்ரன்ட் அடிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆடைகளைக் கழட்டி விட்டு மைதானத்தில் ஓடும் ஆண்களையும் பெண்களையும் நாம் கண்டிருக்கிறோம். இவர்களை சில சமயம் பிரபல ஜனரஞ்சகப் பத்திரிகைகள் பணம் கொடுத்து அனுப்புவதும் மறு நாள் அதனை முக்கிய செய்தியாக பத்திரிகைகளில் பிரசுரிப்பதும் வழமையானது.

வழமைக்கு மாறாக கிரனெடாவில் அவுஸ்திரெலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏப்ரல் 16ல் இடம்பெற்ற கிரிக்ககெட் போட்டியின் போது ஒருவர் முழுமையாக ஆடையணிந்து மைதானத்திற்குள் இறங்கினார். இறங்கியவர் கையில் புலிக்கொடியை ஏந்தி அனைவரதும் கவனத்தை ஈர்த்தார். இவ்விளைஞர் உடனடியாக வெளியேற்றப்பட்டார்.

## சுருக்கச் செய்திகள்

### லண்டன் சஞ்சிகையின் ஆசிரியர்குழு உறுப்பினர் சுட்டுக் கொலை

வட இலங்கை வவுனியா நகரில், ஏப்ரல் 16ல் லண்டன் தமிழ் உலகம் சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். படுகொலை செய்யப்பட்டவர் சந்திரசேகர் சுதாகர்(32) என அடையாளம் காணப்பட்டு உள்ளார். கவிதை எழுதுவதில் ஆர்வமுடைய இவர் 'நிலம்' என்ற கவிதைகளுக்கான இதழை வவுனிவாயில் இருந்து வெளியிட்டு வந்தார். வீரகேசரி நாளேட்டிலும் அவர் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

### கிழக்கு லண்டன் உண்டியல் வர்த்தகர் தலைமறைவு

கிழக்கு லண்டனில் உண்டியல் வர்த்தகதில் ஈடுபட்டு வந்த முக்கிய நபரை சர்வதேச பொலிசார் தேடுகின்றனர். அண்மையில் உண்டியல் விடயமாக சிங்கப்பூர் சென்று பிரச்சினை ஒன்றில் சிக்கிய இவரும் இவரது சுவிஸ் சகாக்கள் இருவரும் சிங்கப்பூர் பொலிசாரால் திருப்பி அனுப்பப்பட்டனர். இலங்கைக் கடவுச்சீட்டை வைத்திருந்த சுவிஸில் இருந்து வந்த இருவரும் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்பட்டு கைது செய்யப்பட்டனர். பிரித்தானியக் கடவுச்சீட்டை வைத்திருந்தவர் லண்டனுக்கு அனுப்பப்பட்டார். இவர் இப்போது லண்டனில் இல்லை எனத் தெரியவருகிறது.

### கவுன்சிலர் தயாவின் பாதையாத்திரை

பிரித்தானிய பாராளுமன்றத்திற்கு உண்ணாவிரதம், லண்டன் கவுன்சில்களுக்கு முன் ஆர்ப்பாட்டம் என்று ஸ்ரண்ட் போராட்டங்களை நடத்திய கவுன்சிலர் தயா இடைக்காடர் மற்றுமொரு போராட்டத்திற்கு தயாராவதாகத் தெரிகிறது. பேர்மிங்காமில் இருந்து லண்டனுக்கு நடைபாதை யாத்திரை ஒன்றை செய்வது பற்றி லண்டன் தமிழ் கவுன்சிலர்களுடன் ஏப்ரல் 19ல் கவுன்சிலர் தயா சந்தித்துப் பேச உள்ளார். வி.புலிகளின் ஆதரவு அமைப்புகள் இதிலிருந்து ஒதுங்கி உள்ளதாக கவுன்சிலர் தயாவுடன் நெருங்கிய வட்டாரங்கள் லண்டன் குரலுக்குத் தெரிவிக்கின்றன. ஒரு நாளுக்கு 5 மணித்தியாலங்கள் நடந்து பின் ஓய்வெடுத்து மீண்டும் நடை பயணத்தை ஆரம்பிக்கப் போவதாக செய்திகள் கசிந்துள்ளது. கவுன்சிலர் தயாவுடன் யாரெல்லாம் கைகோர்த்து நடப்பார்கள் என்பது இதுவரை தெரியவரவில்லை.

## நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ

**பேராசிரியர் பெக்கோ**

**வன்னில இருந்து சிக்னல்:**

தியாகச் செம்மல் தயாவும் சிறை மீண்ட செம்மல் ராமும் மீண்டும் தங்கள் friendshipபை maintain பண்ணுவதாகக் கேள்வி. தியாகச் செம்மல் இப்படி ஒரு பல்டி அடித்ததில் அவருடைய சீஷ்ய கே(ா)டிகளுக்கு ரொம்ப மனவருத்தமாம். மப்பும் மந்தாரமுமாய் போய் விளக்கம் கேட்க தியாகச்செம்மல் வன்னில இருந்து இடையாள சைக்கிள் ஓடச் சொல்லி சிக்னல் வந்ததாக தெளிவாகச் சொன்னாராம்.

**அம்மானின்ட பாலா:**

பாலா அண்ணா எண்டா பிறகு நாங்கள் மதியுரைஞர் என்று விளக்கம் கொடுக்கத் தேவையில்லை. தம்பிக்கொரு பாலா அண்ணா மைலேஜ் செய்த மாதிரி அம்மானுக்கும் ஒரு அண்ணா ஜெயா அண்ணா மைலேஜ் செய்யப் போவதாகக் கேள்வி. ஆனா பாலா அண்ணாவிலும் பார்க்க இவருக்கு ஆயுள் கொஞ்சம் கெட்டியாம். புலின்ர வாயுக்குள்ள போய் வந்த தைரியம் தான்.

**தனக்குத் தானே பட்டம்:**

இவ்வளவு காலமும் எல்லாருக்கும் துரோகிப் பட்டம் issue பண்ணி வந்தவர் இப்ப தனக்கும் அந்தப் பட்டத்தை கொடுத்திருக்கிறாராம். அப்பீலுக்கு உதவும் என்றொரு நம்பிக்கையாம். அப்படி என்ட தங்களுக்கும் அந்தப் பட்டத்தை தாருங்கோ என்று பெரும் கியூவாம். யானை மட்டுமில்ல சேதுவும் தனக்குத்தானே மண்ணள்ளி போடும் என்று கூட்டாளிகள் குசுகுசுக்கினமாம்.

**செந்தோழி:**

செந்தோழி அங்கையக்கா மைலேஜ் செய்யாத இயக்கமே இல்லை. ஆனா அங்கை அக்கா எங்க நிப்பா என்ற விஷயம் அவவுக்கே டவுட். ஆனா நிக்கிற வரைக்கும் உறுதியா நிக்கிறது தான் அவவின்ர பியூட்டி.

பிரித்தானிய இந்துக்கள் மத்தியில் சாதியப் பாகுபாடுகள் பொதுவாக காணப்படுகின்றது. குறைந்தது 50,000 தலித் மக்கள் பிரித்தானியாவில் வாழ்கின்றனர். – தலித் சொலிடாரிட்டி நெற்வேக்

# ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு தோள்கொடுத்த லண்டன் வாழ் சமூக சேவகருக்கு பாரிஸில் பாராட்டுவிழா



தலித் சமூகங்களின் சமூக - பொருளாதார வளர்ச்சிக்காக பாடுபட்டுப் போராடிய சமூக சேவகர் சுந்தரமூர்த்தி என்பவரை கௌரவிக்கும் பாராட்டு விழா ஏப்ரல் 1இல் பிரான்சின் புறநகர் பகுதியான செவ்ரோன் எனும் இடத்தில் நிகழ்ந்தது.தற்போது லண்டனை புகலிடமாகக் கொண்டு வாழ்ந்து வரும் இவர் பிரான்ஸ் சென்றிருந்த போதே இப்பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சங்கானை, கன்பொல்லை, பண்டித்தளர்ச்சி போன்ற கிராமங்களானது யாழ் மேலாதிக்கத்தின் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிய குருஷேத்திரக் களம். இவைகள் காலத்தால் அழியாது தலித் சமூக வரலாற்றை நினைவூட்டும் கிராமங்களாகும். அக்கிராமங்களைப் போன்றே தலித் சமூகங்கள் செறிவாக வாழும் ஒரு கிராமமான சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர் சுந்தரமூர்த்தி.

இவரின் சமூகப் பணியை சமூக அக்கறையை புகலிடத்தில் வாழும் மக்களுக்கும் புதிய சந்ததியினர்களுக்கும் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகவே இந்நிகழ்வை ஒழுங்கு செய்ததாக ஏற்பாட்டாளரும் நிகழ்விற்குத் தலைமை தாங்கியவருமான தோழர் யோகரட்ணம் தெரிவித்தார்.

இவர் தனது தலைமை உரையில் எந்த தமிழ் அரசியல் வாதிகளாலும் கண்டு கொள்ளப்படாது இருந்த சண்டிலிப்பாய்க் கிராமத்திற்கு மின்சார வசதி உட்பட மேடும் பள்ளமுமாய், சேறும் சகதியுமாய் கிடந்த சண்டிலிப்பாய்க் கிராமத்து வீதிகளை (ஒழுங்கைகளை) புனரமைத்த பணியானது சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள் இல்லாது நிகழ்ந்திருக்க வாய்ப்பே இல்லை என்ற உண்மையை தனது உரையில் குறிப்பிட்டார்.

அத்துடன் சிறீலங்கா சுதந்திரக் கட்சின் தலைவியான சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் சண்டிலிப்பாய்க் கிராமத்திற்கு விஜயம் செய்தகாலத்தை நினைவு படுத்திக் கூறினார். மேலும் சிறிமாவோ பண்டாரநாயக்கா பழகிய சண்டிலிப்பாய்க கிராம மேம்பாட்டு அபிமானிகளுடன் உரையாடிய அனுபவத்தின் காரணமாக செங்கோட்டைச் சண்டிலிப்பாய் என்று சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டது பற்றியும் நினைவு படுத்தினார்.

ஞானசேகரன் சமூக சேவகர் சுந்தரமூர்த்தி சண்டிலிப்பாய் சமூகத்திற்காக ஐம்பது வருடங்கள் ஆற்றிய சேவையைப் பாராட்டுமுமாக நீண்ட கவிதை ஒன்றைப் பாடிச்சென்றார். ஞானவடிவேல், திருமதி சிவக்கொழுந்து ஆகியோரும் உரையாற்றினர்.

புகலிட இலக்கிய எழுத்தாளரான சோபாசக்தி பேசுகின்றபோது சண்டிலிப்பாய்க்கு ஒரு சுந்தரமூர்த்தி போல் தனது கிராமமான அல்லைப்பிட்டிக் கிராமத்திற்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் எவருமே கிடைக்காததை பெரும் குறையாக குறிப்பிட்டுச் சென்றார்.

கவிஞர் அருந்ததி உரையாற்றிய போது சமூக சேவகர் சுந்தரமூர்த்தியின் சமூகப் பணிகளுக்கான உற்சாகத்திற்கும் உந்துதலுக்கும் பின்புலமாக அவரின் துணைவியாரே இருந்திருப்பார் ஆகவே நாம் அவரையும் பாராட்டுவது மிக அவசிமானது எனவும் இவ்வாறாக எமது சமூகத்தில் பெண்களுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் கவனதிற்குள்ளாக்கப் படாமல் பெண்களை வெறும் இயந்திர மாக கருதுகின்ற போக்கு மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது எனத் தெரிவித்தார்.

தேவதாசன் பேசுகின்ற போது சண்டிலிப்பாய்ச் சமூகத்தில் (தலித்) சமூக சேவகர் சுந்தரமூர்த்தி போன்று பல தொழில் அதிபர்களை இச் சமூகத்திலிருந்து உருவாக்க வேண்டியது தலித் சமூகத்திற்கான அவசியமான வேலைத்திட்டமாக நாம் மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

எம்.ஆர்.ஸடாலின் பேசுகின்றபோது முன்பெல்லாம் நமது குறிகிய கட்சிச் சிந்தனைகளினால் கட்டுண்டு தனிநபர்களின் சமூகத் தொண்டுகளானது சமூகத்திற்கு பயன்பெறப் போவதில்லை என்ற மனப்போக்கில் நாம் செயல்பட்டது மிகப் பெரிய தவறாக குறிப்பிட்டதுடன் இன்றைய எமது அனுபவச் சூழலில் ஒவ்வொரு சமூகத்திலும் தனிநபர்கள் மூலமாக கிடைக்கப்பெறும் சமூக அபிவருத்திகளே நேர்மையானதாகவும் நியாயமாகவும் இருந்திருக்கிறது என்பதை வலியுறுத்திப் பேசினார்.

நாம் பேசுகின்ற மொழி தமிழ் என்ற காரணத்தினால் இம் மொழி பேசுபவர்களக்கிடையே நிலவும் பண்பாட்டுக் கலாச்சார முரண்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என அசுரா தனது உரையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் பல்வேறு தனித்துவங்களை கொண்ட தமிழ்பேசும் பிரிவினர்களுக்கிடையே மேலாதிக்கம் செலுத்தும் ஓர் பிரிவினரே தமது நலன்களுக்காகவும் அதிகார நோக்கத்திற்காகவுமே அனைத்துத் தமிழருக்கான விடுதலை எனப்பேசிக் கொள்வது! ஒட்டு மொத்தமாக தமிழ் சமூக விடுதலை எனப் பேசப்படுவதெல்லாம் போலித் தனமானவைகளே என்றும் ஒவ்வொரு சமூகப் பிரிவினர்களுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை அடையாளம் கண்டு மேலாதிக்கம் செலுத்தும் சக்திகளுக்கு எதிரான போராட்ட வடிவங்களை மேற்கொள்வதுதான் நியாயமான வழி எனக் கூறிச்சென்றார்.

ஜேம்ஸ் உரையாற்றுகின்றபோது எமது சமூகத்தில் இருக்கின்ற சாதிய அமைப்பு முறைகளானது தற்போது இல்லை என்பதான கருத்துக்கள் நிலவுகிறது. அனால் உண்மை அதுவல்ல அன்று சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் போராட்டங்கள் எவ்வளவு தூரம் அவசியமானதாக இருந்ததோ அதே போன்ற அவசியமும் தேவையும் இன்றும் இருந்து கொண்டுதான் இருக்கிறது என்றும் அதற்கான் போராட்ட வடிவங்களை நாம் தாயார்படுத்த வேண்டிய காலகட்டம் பற்றியும் குறிப்பிட்டுப் பேசினார்.

இறுதியாக ஏற்புரை வழங்கிய சமூக சேவகர் சுந்தரமூர்த்தி பாராட்டக்கூடிய வகையில் நான் பெரிதாக எதுவும் செய்ததாகவோ அல்லது இந்த பாராட்டுதலுக்கு தகுதியுடையவனா என்ற சந்தேகம் தனக்கு இருப்பதாகத் தெரிவித்த அவர், யோகரட்ணம் அவர்களின் அன்புப் பிடியிலிருந்து விடுபட முடியாததன் காரணமாகவே தான் இந்த பாராட்டு விழாவிற்கு சம்மதித்ததாகத் தெரிவித்தார்.

(செய்தி மூலம்: து இணையத் தளம்)

## ரசிகர் மன்றம்

தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் ரசிகர் அவைக்கான நாடக விழா 09.04.2007ல் ஈஸ்டர் விடுமுறையன்று ருய்ஸ்லிப், வின்ஸ்டன் சேர்ச்சில் அரங்கில் இடம்பெற்றது. தரமான கலை நிகழ்ச்சிகளை இலவசமாகக் கண்டு ரசிக்க லண்டனில் உருவாக்கப்பட்ட முதலாவது அவைக்காற்றுக் கழ்கத்தின் ரசிகர் அவையில் தமிழ் அரங்கியல் ஆதரவாளர்களை ஆர்வலர்களாக இணைக்கும் நோக்கில் இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

ஈழத் தமிழ் நாடக உலகில் சுமார் 30 ஆண்டுகள் தொடர்ந்து தனித்தடம் பதித்துவரும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் மூன்று நாடகங்கள் இவ்விழாவில் மேடையேற்றப்பட்டிருந்தன. கண்ணாடி வார்ப்புக்கள், மலைகள் வழிமறித்தால், சர்ச்சை ஆகிய இம்மூன்று நாடகங்களையும் இயக்குநர் க.பாலேந்திரா நெறியாள்கை செய்திருந்தார்.

## பிரிட்டனில் பொலிவூட்

எதிர்வரும் ஜுன் 9ம் திகதி பிரிட்டனில் இந்திய பொலிவுட் திரைப்பட விருது வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. 1993இல் மும்பாய் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளில் ஒருவராகக் கைது செய்யப்பட்டிருக்கும் சஞ்சய் தத் சிறந்த நடிகர் விருதுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளார். ஐஷ்வர்யா ராய், அவரது கணவர் அபிஷேக் பச்சான், மாமன் அமிதாப் பச்சான் ஆகிய மூவரும் இந்நிகழ்வில் விருதுபெறவுள்ளனர்.

அண்மையில் மடம் துசாட் மெழுகுக் காட்சியகத்தில் தனது உருவத்தையும் பொறித்துக்கொண்ட சாருக்கானும் அந்த பொலிவுட் திரைப்பட விழாவில் விருதுபெறவுள்ளதாக அறியப்படுகின்றது.

அண்மைய வருடங்களாக பிரித்தானிய திரைப்படத்துறை பொலிவூட் திரைப்படத் துறையுடன் நெருங்கி செயற்பட்டு வருவதால் பிரித்தானியாவில் பொலிவூட்டின் தடங்கள் ஆழமாகப் பதிகிறது.

## நிழல் நிஜமாகிறது

சமீபத்தில் வெளியாகிய பருத்திவீரன் திரைப்படத்தின் இறுதியில் இடம்பெறும் கூட்டுப் பாலியல் வல்லுறவுக் காட்சியை நிஜமாக்கிய சம்பவம் ஒன்று தமிழகத்தில் இடம்பெற்று உள்ளது. பாலு, ரகுபதி, ரமேஷ் ஆகிய மூன்று லொறிச் சாரதிகள் இக்கூட்டுப் பாலியல் வல்லுறவு தொடர்பாக கைது செய்யப்பட்டு உள்ளனர்.

தமிழகத்தின் வேலூரையடுத்த சலவன் பேட்டையைச் சேர்ந்த லலிதா என்ற பெண்ணை கடத்திச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி இருப்பதாக அப்பெண் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். தம் குற்றத்தை ஒப்புக்கொண்ட இவர்கள் திரைப்படத்தின் பாதிப்பினாலேயே தாம் குடிபோதையில் இதைச் செய்ததாக ஒப்புக்கொண்டு உள்ளனர்.

வேர்ஜினியா உயர் கல்வி மாணவனின் கூட்டுக்கொலைக்கும் திரைப்படங்களின் பாதிப்பு காரணமாகக் கூறப்படுகிறது.

## பிரிட்டனில் பொலிவூட்

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழக பொறியியல்துறை மாணவியான சேட்னா, பரீட்சை நேரத்தில் கொப்பியடிக்க முனைந்ததாக விரிவுரையாளரால் பிடிக்கப்பட்டு பாலியல் சேட்டைக்கு உள்ளாகி உள்ளார். அவமானம் தாங்காது அம்மாணவி சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டு உள்ளார்.

இதனால் பல்கலைக்கழக மாணவர்கள் கொதித்தெழுந்து பல்கலைக்கழக கட்டடங்களையும் தளபாடங்களையும் அடித்து நொறுக்கி உள்ளனர். பாலியல் வன்முறைக்குள்ளாக்கிய விரிவுரையாளர் மணிக்குமாரை சட்டத்தின்முன் நிறுத்தக் கோரி மாணவர்களின் ஆர்ப்பாட்டம் தொடர்கின்றது.

மாணவிகள் இவ்வாறான பாலியல் இம்சைகளுக்கு உள்ளாகும் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் விரிவுரையாளர்கள் தண்டிக்கப்படாமல் தப்பித்துக் கொள்வதும் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அனைத்துத் தமிழருக்கான விடுதலை! ஒட்டு மொத்தமாக தமிழ் சமூக விடுதலை! எனப் பேசப்படுவதெல்லாம் போலியானவை. ஒவ்வொரு சமூகப் பிரிவினர்களுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை அடையாளம் கண்டு மேலாதிக்கம் செலுத்தும் சக்திகளுக்கு எதிரான போராட்ட வடிவங்களை மேற்கொள்வதுதான் நியாயமான வழி. (எழுத்தாளர் அசுரா)

உண்மைகள் உறங்குவதில்லை.

**பிரித்தானியாவில் குற்றங்கள் தொடர்பாக கைது செய்யப்படுபவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஹெரோயின் அல்லது கொக்கெயின் பயன்படுத்துபவர்களாக உள்ளனர்.**

## லண்டனில் நவீன புதைபடிவக் கண்காட்சி

இன்று புதைபடிவவியலாளர்களின் ஆய்வின் பயனாக 5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இன்றுள்ள பூமிப்பந்தில் இருந்த உயிரினங்கள் பற்றியும், வாழ்வியல் முறைகள் பற்றியும் அறிந்து வைத்திருக்கிறோம்.

டைனோசர்களைப் பற்றி அறியாத இன்னும் 5 மில்லியன் ஆண்டுகளின் பின்னர் நாம் வாழும் பாக்கியம் இருக்குமானால், இன்றைய அன்றாடப் பாவனைப் பொருட்களை பதைபடிவவியல் மூலம் அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

நவீன சிற்பக்கலைஞரான ஜேம்ஸ் மேர்வின் (வயது 42) மனதில் எழுந்த இந்தச் சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்த செயற்கைப் புதைபடிவகளின் கண்காட்சி ஒன்று லண்டன் கோவர் வீதியில் அமைந்துள்ள கிராண்ட் விலங்கியல் அருங்காட்சியகத்தில் Grant Museum of Zoology இடம்பெற்றது.

உடைந்த சீப்பின் துண்டங்கள், கோக் குளிர்பான டின்னின் திறவுப்பாகம், தொலைக்காட்சியின்ரிமோட் கொன்ட்ரோல், லெகோ கட்டடத் துண்டுகள் என்று பல்வேறு சமகால பாவனைப்பொருட்கள் மண்ணுள் புதையுண்டு படிவுகளாக இறுகிய நிலையில் 5 மில்லியன் ஆண்டுகளுக்கப் பின்னர் எப்படித் தோண்டியெடுக்கப படப்போகின்றன என்பதை இந்தக் கணகாட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சுமார் 25 சிற்பங்களும் எம்மை இன்ப அதிர்ச்சிக்குள் ஆழ்த்திவிடுகின்றன. இந்த நவீன புதைபடிவவியல் கண்காட்சி மார்ச் 17ம் திகதிவரை இடம்பெற்றது.

## வறுமையால் வாடும் குழந்தைகள்

கடந்த ஆண்டு ஐக்கிய இராச்சியத்தின் சனத்தொகையில் 2.8 மில்லியன் குழந்தைகள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். கடந்த ஆண்டில் மட்டும் மேலதிகமாக 1,00,000 சிறுவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்வதாகக் கணக்கெடுக்கப்பட்டு உள்ளது.

இந்த அதிகரிப்பானது அபிவிருத்தி அடைந்த ஒரு நாட்டில் ஏற்றுக்கொள்ள முடியாத மனித அவலமாகச் சித்திரிக்கப் பட்டு உள்ளது. பிரித்தானிய அரசின் கொள்கைத்திட்டத்தில் 2010இல் வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைப்பதெனவும், 2020இல் முற்றாக அதை இல்லாமல்செய்வதெனவும் திட்டமிடப்பட்டிருந்தது.



இந்நிலையில் வெளிவந்துள்ள இப்புள்ளிவிபர அறிக்கை அரசின் கொள்கைத் திட்டமிடல் வல்லுநர்களை தலையில் கைவைக்கச் செய்துள்ளது.

வறுமையில் வாடும் குழந்தைகள் பற்றிய பர்நாடோஸ் என்ற சிறுவர் அமைப்பினர் தரும் சில உண்மைகள்:

பிரித்தானியாவில் 3.8 மில்லியன் குழந்தைகள் வறுமையில் வாடுகின்றனர். அதாவது மூன்றில் ஒரு குழந்தை வறுமையில் உள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பிரித்தானியாவிலேயே வறுமையில் வாழும் குழந்தைகளின் விகிதம் மோசமாக உள்ளது.

ஐரோப்பாவில் வறுமையில் வாழும் குழந்தைகளில் மூன்றில் ஒரு பகுதியினர் பிரித்தானியாவில் வாழ்கின்றனர்.

20 ஆண்டுகளுக்கு முன்னரை விட தற்போது குழந்தைகளின் வறுமை நிலை மூன்று மடங்கு அதிகரித்து உள்ளது.

யாரும் தொழில் செய்யாமல் உள்ள குடும்பத்தில் ஐந்தில் ஒரு குழந்தைகள் வாழ்கின்றனர்.

வறுமையான குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளும் தாங்களும் வறுமையான வாழ்வை எதிர்நோக்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

## இஸ்லாமிய தீவிரவாதத்தைக் கட்டப்படுத்த பள்ளிவாசல்களுக்கு நிதியுதவி


லண்டனில் இஸ்லாமிய தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் சிறுபான்மைச் சமூகங்களைத் காத்திரமாகப் பங்கேற்க வைக்கும் பணியில் லண்டன் பரோ கவுன்சில்கள் ஈடுபட்டு உள்ளன. இதற்கான நிதியுதவிகளை பள்ளிவாசல்களுக்கும், முஸ்லிம் சிறுபான்மை சமூக அமைப்புகளுக்கும் வழங்க அவை முன்வந்துள்ளன.

புதிதாக உருவாக்கப்பட்ட தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தும் செய்ற்பாடுகளுக்கான நிதியமான Preventing Violent Extremism Pathfinder Fund என்ற அமைப்பு இதற்கான நிதி உதவிகளை குரொய்டன் உள்ளிட்ட லண்டனிலுள்ள 24 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கி உள்ளது. அமைதிவழியில் இயங்கும் பெரும்பான்மை முஸ்லிம் சமூகங்களை சிறிய குழுவாக இயங்கும் தீவிரவாத முஸ்லிம் இளைஞர்களுடன் தொடர்புகொண்டு அவர்களைத் திசைதிருப்பும் வழிமுறைகளைக் கண்டறிவதற்கே பெரும்பாலும் இந்நிதி அப்பிரதேச கவன்சில்களால் செலவிடப்படும் என்று தெரிய வருகின்றது. முஸ்லிம் தீவிரவாதத்தை அதன் அடித்தளத்தலேயே கருவறுக்கும் நடவடிக்கையாக இத்திட்டம் அமைகின்றது.



## பாரிஸில் சபாவுக்கு அஞ்சலி

ஏப்ரல் 29, 'அனைத்துப் பயங்கரவாதங்களுக்கும் எதிராக எங்களின் குரல்களை பதிவு செய்வோம்' எனும் தலைப்பிலான சந்திப்பு ஒன்றுக்கு பிரான்ஸ் நண்பர்கள் வட்டம் அழைப்பு விடுத்து உள்ளது. 1994 மே 1ல் பாரிஸ்சில் படுகொலை செய்யப்பட்ட சபாலிங்கத்தின் 13ம் ஆண்டின் நினைவாக இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இப்படுகொலை வி.புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தமது அறிவிப்பில் தெரிவித்து உள்ளனர். இக்கொலைக் குற்றவாளிகளையோ அதன் பின் படுகொலை செய்யப்பட்ட ஈழமுரசு ஆசிரியர் மற்றும் அவரது நண்பரின் கொலையாளிகளையொ பிரான்ஸ் பொலிஸார் சட்டத்தின் முன் நிறுத்தத் தவறி உள்ளமை குறிப்பிடத்தக்கது.



அனைத்துப் பயங்கரவாதங்களுக்கும் வன்முறை அரசியலுக்கும் எதிராக நாம் எழுப்புகின்ற நியாயமிக்க கேள்விகளின் நியாயப்பாடுகள்தான் இன்றைய காலகட்டத்தின் மிகவும் அவசர தேவையாக உள்ளது என பிரான்ஸ் நண்பர்கள் வட்டம் இது தொடர்பாக வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்து உள்ளது. இத்தகைய பயங்கரவாதங்களுக்கும் வன்முறை அரசியலுக்கும் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக போராடுவதும் மாற்றுக் கருத்துக்களுக்கும் எதிர் குரலுக்குமான வெளியை உருவாக்க முயல்வதும் எங்களின் வரலாற்றுக் கடமை மாத்திரமல்ல எமது அறவியல் கடப்பாடும் ஆகும் எனவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## ஆரோக்கிய வாழ்வுக்கான பீட்சா தயார்


சுகாதாரக் கேடற்றதும் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்ததுமான பிட்சா (Pizza) வகையை அமெரிக்க சத்துணவு நிறுவனம் ஒன்றின் ஆராய்ச்சிப் பிரிவு தயாரித்து உள்ளது. பிட்சாவின் சத்துணவு இரகசியம் அதன் மாவில் தங்கியிருப்பதாகவும், பிட்சாவின் அடித் தளமாகப் பயன்படும் மாவு தவிடுநீக்காத கோதுமையாக இருப்பின் தேகாரோக்கியமானதாக அமையலாம் என்றும் இவ்விஞ்ஞானிகள் கண்டறிந்து உள்ளனர்.

சுவைகுன்றாத வகையில் இந்த மாவு மேலதிகமாக குறிப்பிட்ட சில சத்துணவுப் பொருட்கள் கலந்து உருவாக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டதாகவும், அதிசயமான பின்விளைவுகளை பல நோயாளர்களிடம் அது விளைவித்ததாகவும் குறிப்பிடப்பட்டு உள்ளது. விரைவில் இந்தவகைப் பிட்சா பரவலாக சந்தைப்படுத்தப்படலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதய நோவு, புற்றுநோய், போன்றவற்றுக்கு நிவாரணியான சத்துக்கள் இப்புதிய பிட்சாவில் இடம்பெற்றுள்ளதாம்.

## ரொப் கியர் ஜெரிமியும் மலேசியாவின் பெருடா காரும்

பீபீசி ரொப் கியர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஜெரமி கிளார்க்சன் மலேசிய தேசிய கார் உற்பத்தி நிறுவனத்தின் பிரபல்யமான Perodua என்ற மொடல் காரை உதவாக்கரை என்று அண்மையில் தன் நிகழ்ச்சியொன்றில் இகழ்ந்தமையை மலேசிய கைத்தொழில் அமைச்சர் அப்துல் ரஹ்மான் சுலைமான் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

தமது தயாரிப்பில் உருவான இந்த வாகனத்தைப் பற்றிய குறைகள் எதையுமே பிரித்தானிய வாடிக்கையாளர்கள் தமக்கோ வாகனத்தின் உற்பத்தி நிறுவனத்திற்கோ முறையிடாத நிலையில் ஜெரமி கிளாக்சன் தனது நிகழ்ச்சியின் வாயிலாக அவதூறு செய்ததில் ஏதோ வர்த்தக நலன் தங்கியிருப்பதாகத் தான் சந்தேகிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.



ஜெரமி கிளார்க்சன் தன் நிகழ்ச்சியின்போது மலேசியத் தயாரிப்பான "நசழனரய வாகனத்தைத் திரையில் காட்டியதுடன் உணர்வற்ற, கற்பனைக்கப்பாற்பட்ட ஜடம் என்றும் பயனற்ற உலோகக் கலவை என்றும் அதனை தூஷித்து, அந்த வாகனத்தை அடித்து உடைத்து நொருக்கி ஒரு பிரேனில் கொழுவி நிலத்தில் மோதி நிர்மூலமாக்கியிருந்தார்.

கைத்தொழில் அமைச்சர் இதுபற்றிய தனது எதிர்ப்பினை பீபீசீ நிறுவனத்திற்கும் அனுப்பிவைத்திருக்கிறார். பெரோடுவா மலேசியாவின் இரண்டாவது தேசிய வாகன உற்பத்தி நிறுவனமாகும். சிறியரக வாகனங்களை 1995முதல் இந்நிறுவனம் உற்பத்திசெய்து வருகின்றது.

- அற்புதன் -

# மார்க்சின் பேரப்பிள்ளைகளும் புலி எதிர்ப்பும்

மக்களின் அரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொள்ளாமல், சித்தாந்தத்தை நடைமுறையுடன் இணைக்காமல், கிளிப் பிள்ளைகளைப் போல் புரட்சிகரமான சொற்களை உமிழ்வது புலி எதிர்ப்பாளர்களின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது. சுத்தியலையும், சிவப்பு அட்டைப் புத்தகங்களையும் காட்சிப் படுத்துவது தான் மாக்சிசம் என்றும், சீனாவில், ரசியாவில் நடந்தது தான் புரட்சி என்றும், மாக்சிசத்தை அறிவியல் அடிப்படையில் அணுகாமல் அதனை ஒரு மதத்தைப் போல் அணுகும் இந்தப் போலிச் சித்தாந்திகள் வரலாற்றின் போக்கைத் தீர்மானிக்கப் போவதில்லை.

அண்மையில் சரிநிகரில் நேபாள மோவோக்களின் தலைவர் பிரச்சண்டா வின் பேட்டி வெளியாகி இருந்தது. பிரச்சண்டா இந்த வரட்டுச் சித்தாந்த குழு வாதத்தை வெகுவாக விமர்சித்து இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. 21 ஆம் நூற்றாண்டுக்கான நடைமுறை மாக்சிசம் பற்றியும் கலப்புப் பொருளாதாரம் பற்றியும் அவர் பேசி இருந்தார். போன நூற்றாண்டில் நிகழ்த்தப்பட்ட ரசியப் புரட்சியோ அன்றி சீனப் புரட்சியோ இந்த நூற்றாண்டுக்கும், எங்கும், எப்போதும் பொருந்தும் என்று எதிர்பார்ப்பது அறிவிலித்தனம். ஒவ்வொரு போராட்டத்தின் அக மற்றும் புற நிலைகளும் சர்வதேச் சூழலும், பூகோள அரசியலும் வேறுபடுகிறது.

மாற்றாக மாக்சிசத்தின் அடிப்படை களைப் புரிந்து, சிங்கள பேரினவாதத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் ஏகாத்திபதிய சக்திகளுக்கு எதிராக நுண்ணிய அரசியற்தளத்தில் நடைமுறை ரீதியாக இயங்கும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்திகளான புலிகளின் அரசியலை இவர்கள் இன்னும் உள்ளார்ந்தமாக புரிந்து கொள்ளவில்லை, அவ்வாறான புரிதல் ஏற்படாததற்கான அடிப்படைக் காரணம் இவர்களின் சிந்தனையின் வரட்டுத் தனமும், இயற்கையாக புலிகள் மேலெழும் தனிப்பட்ட காழ்ப் புணர்வுமே. இந்த வரட்டுச் சித்தாந்திகளின் அரசியல் மலட்டுத்தனமே, இவர்களால் ஒரு மக்கள் மயப்பட்ட பரந்துபட்ட வெகுசன அமைப்பை கட்டி எழுப்ப முடியாதற்கான அடிப்படைக் காரணம். வெறுமையாக புரட்சிகரச் சொற்களை உமிழும் இவர்கள் உண்மையில் மாக்சிசத்தை ஒரு நடைமுறைச் சித்தாந்தமாக அன்றி, உச்சாடனம் செய்யும் மந்திரமாகவும், மாக்சையும், லெனினையும், மாவோவையும் கடவுளர்களாகவும், அவர்களின் கூற்றுக்களை எதுவித விமர்சனமும் அற்ற வேத வாக்குகளாகவும் கருதிக் கொண்டதன் வெளிப்பாடே அன்றி வேறொன்றும் இல்லை. இவர்களின் அரசியல் என்பது சொன்னதை மீள ஒப்புவித்தல் என்பதுடன் மட்டுமே நின்று விடுகிறது.

ஒரு சித்தாந்ததை அதன் நடை முறையுடனும் அது கூறப்பட்ட காலப் பகுதியின் அக, புற நிலைகளுடனும் இவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை. ஒரு சித்தாந்ததின் அடிப்படை அதன் தர்க்கமும், சிந்தனையுமே அன்றி வெறும் சொல்லாடல்கள் அல்ல. பிரச்சண்டா குறிப்பிடுவது போல் மக்கள் அமைப்பொன்றை நிறுவுவதற்கு ஒரு அடிப்படை வேண்டும். அந்த அடிப்படை மக்கள் மத்தியில் இருக்கும் பிராதானமான ஒடுக்குமுறையின் எதிர் நிலையாகவே அமைய முடியும். அரசியல் யாதார்த்தம் என்பதுவும் நுண் அரசியல் என்பதுவும் அதுவே. நேபாளத்தில் நிலவுடமை அடிப்படையிலான மன்ன ராட்சியே பிரதானமான ஒடுக்கு முறைக் கருத்தியலாக இருக்கிறது. சிறிலங்காவில் அது சிங்கள பௌத்த பேரினவாதமாக இருக்கிறது. ஒரு மக்கள் மயப்பட்ட அரசியல் இயக்கம் இந்தப் பிரதான முரண்பாட்டை அடிப்படையாக வைத்தே கட்டி எழுப்பப்பட முடியும்.

புலிகள் மேலான காழ்ப்புணர்வே இவர்களை அண்மையில் பிரன்சு அரசின் ஜனநாயக விரோதமான நடவடிக்கைகளை நியாயப்படுத்தி எழுத வைத்துள்ளது. ஒரு புறத்தில் புலிகளை ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளாச் சொல்லிக் கொண்டே இன்னொரு பக்கத்தில் அந்த ஏகாதிபத்தியக் கூட்டின் புலிகள் மீதான, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதான நடவடிக்கைகளை ஆதரித்தும் இவர்களால் எழுத முடிவது இவர்களின் அரசியல் வங்குரோத்துத் தனத்தின் உச்சக்கட்டம். ஏகாதிபத்தியங்களின் உண்மையான அடிவருடிகள் யார் என்பதை தோழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மாக்சிய முத்திரை குத்தல்களுக்கு அப்பால் சென்று தோழர்கள் இவர்களின் போலித் தனத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# சிங்கள சினிமா: 'யாப்பன'விற்கு வாருங்கள்

ரதன்

இலங்கையில் தடை செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய சிங்கள திரைப்பட இயக்குனர்களில் ஒருவர் அசோக கங்கம. ஏனையோர் பிரசன்ன விதானக, விமுக்தி ஜயசுந்தர ஆகியோர்.

இவர்களது படங்களின் தடைக்கு எதிராக, மூத்த திரைப்பட இயக்குனரும், சர்வதேச திரைப்பட விருதுகளை பெற்றவருமான லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் கருத்து தெரிவித்தபொழுது, இவ்வாறான தடைகள் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்துக்கு நாட்டை இட்டு செல்கின்றமைக்கான அறிகுறியாகும் என தெரிவித்துள்ளார்.

The Chairman of the National Film Corporation (NFC) Sunil S. Sirisena (who is also a secretary to the Defence



Ministry) கருத்து தெரிவிக்கையில் படைப்பாளிகளுக்கு எல்லைகள் வகுப்பது தரமான படங்கள் வெளிவருவதை தடைசெய்யும் என்றார்.

தனது Pura Handa Kaluwara' படத்துக்கு எதிரான தடைக்கு உயர் நீதி மனறம் சென்றவரும் சர்வதேச திரைப்பட விருதுகளை பெற்றவருமான பிரசன்ன விதானக கருத்து தெரிவிக்கையில் அரசியல்வாதிகள், தங்களின் சப்பாத்துக்களின் கீழ், படைப்பாளிகள் தமது கருத்துக்களை, கொள்கைகளை போட்டுவிடவேணடும் என நினைக்கின்றனர். ஆனால் இதற்கெல்லாம் படைப்பாளிகள் அடிபணியப் கூடாது. கிட்லர், ஸ்ராலினுக்கு எதிராக நிமிர்ந்து நின்ற படைப்பாளிகளை இன்றும் உலகம் மதிக்கின்றது என்றார்.

ஆனாலும் பெரும்பாலான வெகுசனத் தொடர்பு சாதனங்கள், இத்தடையை ஆதரித்து மௌனம் தெரிவித்தன. இவற்றையும் மீறி இந்த படைப்பாளிகள் தொடர்ந்து படங்களை தயாரிக்கின்றனர்.

இதில் அசோக கங்கமவும் ஒருவர். இவர் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக முதலில் This is my moon (இது என் நிலா) என்ற படத்தையும், பின்னர் சுனாமி பற்றிய கிழக்கிலங்கையை மையமாகக் கொண்ட 'Neganahira Weralen Asena' or 'The East is Calling' என்ற தொலைக் காட்சி தொடரையும் இயக்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து 'Me Paren Enna' (இவ்வழியால் வாருங்கள் - Take This Road) என்ற தெலைக் காட்சி தொடரையும் இயக்கியுள்ளார். இந்த தொடரைப்பற்றி பார்ப்பதற்கு முன்னர், இவர் தமிழ் தேசியம் பற்றி தெரிவித்த கருத்துக்களை பார்ப்பது அவசியம். அவற்றில் சில

* இலங்கையில் கலாச்சாரம் இல்லை, சமூகம் இல்லை, மனித உறவுகள் இல்லை. இருப்பதெல்லாம் தனி மனிதர்கள். அவர்கள் தன்னிச்சையாக இருக்கலாம், விரும்பின் நிர்வாணமாக நடந்து திரியலாம். சுதந்திரமாக செக்ஸ் படம் எடுக்கலாம்

* தேசியவாதிகள், இனவாதிகளின் கருத்துப்படி, இனப்பிரச்சினை மேற் கத்தியரால் ஏற்படுத்தப்பட்டது. இவாகளுக்கு மேற்கத்திய சினிமாவும், விஞ்ஞானமும் எதிரி. ஆனால், இன்று வீதியால ஒரு பெண் நடந்து செல்ல முடியாது, பாடசாலைக்கு சிறுவர்கள் வாகனத்தில் கூட பாதுகாப்பாகச் செல்ல முடியாது. மக்களுக்கு தங்களுக்கு தேவையான உணவு, உடையை வாங்க முடியாதுள்ளது. வெகுசன தொடாபு சாதனங்களில் வன்முறையைப் பற்றிய செய்திகள் நிரம்பி வழிகின்றன. 'யுத்தத்தில் இராணுவத்தின் தியாகம் என்பதும் தேசத்துக்காக, நாட்டு மக்களுக்காக என்று கூறப்படுபவையும் வெறும் அரசியல் கோஷங்கள். வேறு தொழில் இல்லாமையினால் வாழ்க்கை யைக் கொண்டு நடத்தவே இராணுவத்தில் பலர் சேர்கின்றனர்.

* போரின் விளைவு - உ.ம்: குழந்தைகள் பாதுகாப்பு மையத்தின் பிரகாரத்தின் படி, சுமார் 33,000 குழந்தை பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர். சுமார் 20 விகிதம் பெண் சிறுவர்கள், 10 விகிதம் ஆண் சிறுவர்கள் பாலியல் கொடுமைக்கு உள்ளாகின்றனர்.

* நான் விடுதலைப் புலிகள் ஆதரவாளனில்லை. ஆனால் தமிழ் மக்கள் பிரச்சினையை ஆதரிக்கின்றேன். நிபந்தனையற்ற போர்நிறுத்தத்தை வலியுறுத்துகின்றேன்.

இவை அசோக கங்கம இலங்கையைப் பற்றி தெரிவித்த கருத்துக்கள்.

## This is my moon (இது என் நிலா)

போரின்போது இராணுவச் சிப்பாயிடம் சென்றடைகிறாள் ஒருத்தி. சிப்பாய் இவளைக் கண்டதும் சுட முயற்சிக்கிறான். அவள் தனது சங்கிலியைக் கழற்றுகிறாள். ஆனால் அவன் குறி வைப்பதில் இருந்து விலகவில்லை. அடுத்து பாவாடையைத் தூக்குகிறாள். முகத்தை மூடிக் கொள்கிறாள். அவன் புணர்கிறான். அவனைத் தொடர்ந்து அவளும் கிராமத்துக்குச் செல்கிறாள். இவளது வருகை அவனது முறைப் பெண்ணுக்கு பயத்தை ஏற்படுத்துகிறது. கிராமத்தில் சிப்பாயின் அண்ணன், மாணவன் போன்றோரால் அவள் பாலியல் வல்லுறவுக்குள்ளாகிறாள். இறுதியாக அருகில் உள்ள பௌத்த விகாரையில் தஞ்சம் அடைகிறாள். மறுநாள் காவியுடையை அநாதரவாக விட்டுவிட்டு பிக்கு காணாமல் போய்விடுகிறார். இறுதியில் இப் பெண்ணுக்கு பிறக்கும் பிள்ளையை கைகளில் ஏந்தி 'இது என் நிலா' என்கிறான். இதுவும் தமிழ் மக்கள் பிரச்சினை தங்களது கைகளில் உள்ளன என்று கூறுவது போல் உள்ளது.

இங்கு யுத்தத்தின் கொடுமையை பாலியல், மதம் எனபனவற்றின் ஊடாக் காட்ட முற்படுகிறார். யுத்தத்தின் பிரதிபலிப் புகளை சமூக தளத்தில் வெளிப்ப டுத்தியுள்ளார் இயக்குநர். கிராமங்களில் பாலியல் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளது, அதன் வெளிப்பாடு தான் போர்ப் பிரதேசங்களில் இராணுவ வீரர்களின் பாலியல் கொடூரங்கள் என சமாதானம் கூறுகிறாரோ என்ற ஐயமும் எழுகிறது. மனிதனின் வழமையான இயங்குதலை, இருத்தலை தீர்மானிப்பது பாலியலா? இன்றைய சிங்கள சமூகம் பாலியலை மையப்பட்டு இயங்குகிறது என்பது இவரது குற்றச்சாட்டு. இது பௌத்த, சிங்கள சமூகத்ததை விமர்சிக்கலாம், ஆனால் இனப்பிரச்சினை கொடூரங்களுக்கான காரணிகளில் ஒன்றாக கருதமுடியாது.

இறுதியாக 'இது என் நிலா' என இராணுவவீரர் கூறும் காட்சி தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் ஒன்றிவிடவேண்டுமா? என்ற கேள்வியை எழுப்புகின்றது. இங்கும் யுத்தத்தின் மூலவேர் ஆராயப்படாமல் அதன் எச்ச சொச்சங்கள் விமர்சிக்கப்படுகின்றன.

**இலங்கையில் போரின் விளைவால் சுமார் 33,000 குழந்தை பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர். சுமார் ௨0 விகிதம் பெண் சிறுவர்கள், ıo விகிதம் ஆண் சிறுவர்கள் பாலியல் கொடுமைக்கு உள்ளாகின்றனர்.**

**உண்மைகள் உறங்குவதில்லை.**

*ஈலிங் ஆலயத்தின் பதிவு செய்யப்பட்ட மொத்த வருமானம்:* Mar 2000: £212,641. Mar 2001: £226,772. Mar 2002: £324,158. Mar 2003: £554,347. Mar 2004: £584,136. Mar 2005: £760,111. Mar 2006 & 07: n/a.

முன் பக்கத் தொடர்ச்சி

# ஈலிங் அம்மன் ஆலயம்:

## வருமானமும் உதவியும்

ரஷ்டிகள் குழுவும் அவர்களின் பினாமிகளாக இயங்கும் தற்போதைய செயற்குழுவும் ஆலய நிர்வாகத்தை உடும்புப் பிடியில் வைத்திருப்பதற்குக் காரணம் ஆலயத்தின் வருமானம். 2005 ஏப்ரல் நிதியாண்டில் ஆலயத்தின் வருமானம் £711,908 பவுண்கள். சென்ற நிதியாண்டுக்கான கணக்கு விபரங்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை.

ஆண்டு தோறும் ஆலயத்தின் வருமானம் அதிகரித்து வந்தபோதும் அப்பையா தேவசகாயம் தலைமையிலான ரஷ்டிகள் குழு ஆலயம் இலங்கையில் மேற்கொண்ட சில பொதுத் திட்டங்களை கைவிட்டு உள்ளது. இங்கு லண்டனிலும் ஆலயத்தின் சமூகப் பணிகள் முடக்கப்பட்டு ஆலயம் பணம் புரட்டும் வியாபார நிறுவனமாக்கப்படும் போக்கு உருவானது. தேவசகாயம் தலைமையிலான அறக்கட்டளை, தாயகத்தில் ஆலயத்தின் ஆதரவில் இயங்கிய சில கணணிப் பயிற்சி நிலையங்கள், தொழில் பயிற்சி நிலையங்கள், சிறுவர் இல்லங்களுக்கான நிதியை நிறுத்தினர். பாதிக்கபட்ட துன்பப்பட்ட மக்களுக்குச் செல்லும் என்ற நம்பிக்கையில் அடியார்கள் வாரி வழங்கிய நிதி அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை. ஆலயத்தின் ஆதரவில் பராமரிக்கப்பட்ட சிறுவர்கள் கைவிடப்பட்டனர்.

நவம்பர் 2000ல் ஆலயத்தின் நிகர வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவது என்ற தீர்மானத்தை கருணைலிங்கம் நிறைவேற்றினார். அன்று முதல் 2004 ஏப்ரல் வரையான காலப்பகுதியில் 300க்கும் மேற்பட்ட தடவைகள் £711,908 பவுண்களுக்கும் அதிகமான நிதி தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

ஆனால் 2005 ஏப்ரலில் கருணை லிங்கத்தின் நிர்வாகத்தை கவிழ்த்து தற்போது வரை நிர்வாகத்தை பரி பாலிக்கும் தேவசகாயம் தலைமையி லான ரஷ்டிகள் குழு தாயகத்திற்கு அனுப்பிய முழுமையான நிதி விபரங்களை வெளியிடவில்லை. அண்மைக்காலமாக லண்டன் குரல், உதயன், தேசம் சஞ்சிகை மற்றும் இணைய ஊடகங்களால் வழங்கப்பட்ட அழுத்தத்தைத் தெடர்ந்து 2006 மார்ச் - 2007 ஏப்ரல் வரையான காலப்பகுதியில் 112,000 வரையே தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு ஆலயத்தின் வருமானம் £760,000 பவுண்கள் என்பது கவனிக்கத்தக்கது.

### காலக் கண்ணாடியில் ஈலிங் அம்பாள் ஆலயம்

1991: அம்பாளின் படத்தை வெவ்வேறு இடங்களில் வைத்து பூஜை செய்து வழிபட ஆரம்பித்தனர்.

1995: ஆலயம் அமைப்பதற்கு நிதி சேகரித்து நிலம் வாங்கப்பட்டது. மொத்தப் பணமும் மக்களிடம் இருந்தே சேகரிக்கப்பட்டது.

1997: ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு கருணைலிங்கம் ஆலய அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்டார்.

2000: நவம்பரில் நிகர வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை அல்லல்படும் மக்களுக்கு அனுப்ப வேண்டும் என்ற தீர்மானத்தை எதிர்ப்புக்கு மத்தியில் கொண்டுவந்து 4 வாக்குகள் மட்டுமே அதிகம் பெற்று நிறைவேற்றினார் கருணைலிங்கம்.

2003: ஓகஸ்டில் ஈழபதீஸ்வரர் ஆலய விவகாரத்தில் சிவராஜாவுக்கு ஆதரவாக செயற்பட்டதால் கருணைலிங்கத்திற்கு ஜெயதேவனுடன் முரண்பாடுகள் ஏற்பட்டது.

2005: ஏப்ரலில் எதிரணி ஆர் ஜெயதேவனின் பின்னணியுடன் (ஜெயதேவன் இதனை மறுத்துள்ளார்.) கருணைலிங்கத்தின் செயற்குழுவை கவிழ்த்தது.

இருதரப்பும் நீதிமன்றம் சென்றனர். செப்ரம்பரில் இருதரப்புக்குமிடையே மத்தியஸ்தம் செய்ய உருவாக்கப்பட்ட குழு தூக்கி எறியப்பட்டது.

2006: பிரச்சினை நீதி மன்றத்தில் இருந்து சரிற்றி கொமிஷனுக்கு சென்றது. முடிவுக்காக இரு தரப்பும் காத்திருந்தனர்.

2007: சரிற்றி கொமிஷன் செயற்குழுவை கலைக்கும் அதிகாரம் ரஷ்டிகளுக்கு இல்லை என்றும் புதிய செயற்குழு நியமனம் முறையற்றது என்றும் தெரிவித்தது.

## உறுப்புரிமை

மேலும் ஆலய உறுப்பினர்களின் உறுப்புரிமை இன்னமும் பிரச்சினையாக உள்ளதை சுட்டிக்காட்டியுள்ள சரிற்றி கொமிஷன் சம்மந்தப்பட்ட சகல தரப்பினரும் இதில் ஈடுபட்டு சுமூகமாக அதனை Electoral Reform Srevices இன் உதவியுடன் தீர்க்க வேண்டும் என்று கேட்டுள்ளது. முன்னாள் செயற்குழுத் தலைவர் கருணலிங்கத்தின் தலைமையிலான செயற்குழு கவிழ்க்கப்பட்ட போது ஆலய பொதுக் குழுவில் 1400 உறுப்பினர்கள் வரை அங்கத்தவர்களாக இருந்தனர். தற்போது இத்தொகை 400க்கும் குறைவானதாக குறைந்துள்ளது.

தான் அடுத்த தேர்தலில் போட்டியிட்டாலும் வெற்றி பெறுவதைத் தடுக்கும் வகையில் வாக்காளர் பட்டியலில் உள்ள தனது ஆதரவாளர்களை நீக்கி உள்ளதாக கருணைலிங்கம் லண்டன் குரலுக்குத் தெரிவித்தார்.

## கவிழ்க்கப்பட்ட கருணைலிங்கம்

1997 முதல் நான்கு தடவைகள் தொடர்ச்சியாக வெற்றி பெற்று ஈலிங் அம்மன் ஆலயத்தின் நிர்வாகத் தலைவராக கருணலிங்கம் இருந்துள்ளார். இவரது காலகட்டத்தில் தான் ஆலயம் முழுமையாகக் கட்டப்பட்டு தாயகத்திற்கு நிதியுதவி வழங்கி ஈலிங் அம்மன் ஆலயம் பொதுப் பணிகளில் ஈடுபட்டது. லண்டன் ஈலிங் அம்மன் ஆலயத்தின் பெயர் தாயகத்திலும் பிரபல்யம் அடைந்தது.

மேலும் லண்டனிலும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு ஆலய மண்டபத்தை இலவசமாக வழங்கியும் உணவு தயாரித்து வழங்கியும் ஆலயம் மக்கள் சேவையில் ஈடுபட்டது. ஆலயத்தின் கணக்கு விபரங்கள் மக்கள் பார்வையிடும் வகையில் வைக்கப்பட்டது. ஆலயத்தின் நன்மதிப்பும் உயர்ந்தது. நன்மதிப்புடன் கருணலிங்கத்தின் பெயரும் நன்மதிப்பும் உயர்ந்தது.

## உட்பூசல்

அதுவே கருணைலிங்கத்திற்கு எதிரான பொறாமை உணர்வு வளரவும் உட்பூசலுக்கும் காரணமானது. தேர்தல் மூலம் கருணலிங்கத்தை தோற்கடிக்க முடியாதவர்களை பயன்படுத்தி ரஷ்டிகள் குழு (ஜெயதேவனுடனும் இணைந்து என்று நம்பப்படுகிறது) கருணலிங்கத்தின் நிர்வாகத்தை கவிழ்த்தது. மேலும் அடுத்த தேர்தலில் கருணலிங்கம் நின்றால் மீண்டும் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதால் ஆலய அறங்காவல் சபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வந்தது.

## பொங்கும் சகாயம்

தற்போது சரிற்றி கொமிஷனின் தலையீடு ரஷ்டிகள் குழுவிற்கு பெரும் தலையிடியாக அமைந்துள்ளது. ஏப்ரல் 16ல் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் ரஷ்டிகள் குழுவின் தலைவர் தேவசகாயம் சரிற்றி கொமிஷன் அண்மைய கடிதங்களில் வெளியிட்ட கருத்துக்களுக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு உள்ளார். தற்போதைய செயற்குழுவை சரியான முறையிலேயே தாங்கள் தெரிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதே கருத்தை வெளியிட்ட ஆலயத்தின் சட்ட ஆலோசகரும் கவிழ்க்கப்பட்ட செயற்குழுவுடன் தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வி அடைந்த காயத்திரி கதிர்காமநாதன், அங்கத்தவர்களின் பதிவுகளில் முறை கேடுகள் நிகழ்ந்ததனாலேயே முன்னைய செயற்குழு உறுப்பினர்கள் தகுதியற்றவ ர்களாக்கப்பட்டனர் எனத் தெரிவித்தார்.

தற்போதுள்ள செயற்குழுவின் ஆயுட்காலம் மார்ச் 31ல் முடிவடைந்த தால் அதன் நியமனம் முறையானதா இல்லையா என்பது ஒரு பிரச்சினையல்ல என அவ்விசேட கூட்டத்தில் பூசி மெழுகப்பட்டது. புதிய செயற்குழுவுக்கான தேர்தலை யூன் 17ல் நடத்தவும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் வாக்களிப்போர் பட்டியல் எப்படி சீர்செய்யப்படும் தேர்தல் குழு எவ்வாறு அமையும் என்பதைப் பொறுத்தே அம்பாள் மீதான கிடுக்குப்பிடி அவிழும்.



1ம் பக் தொடர்ச்சி

## காலத்தால் அழியாத வரலாற்றுக்கறை

சேர்ந்தவர்கள் என்றும் செய்திகள் வெளியாகி உள்ளது. இவர்களுக்கான நினைவு அஞ்சலிகள் சில இணையத் தளங்களில் வெளியாகி உள்ளது.

ரெலோ படுகொலை நிகழ்து ஓராண்டு நினைவாக 1987ல் நியூகாமில் இடம்பெற்ற நிகழ்வில் நடேசன் சத்தியேந்திரா அதனை இவ்வாறு நினைவு கூர்ந்திருந்தார். "உண்மைகளுக்கு மேடையும் வெளிச்சமும் தேவையில்லை. அதற்கென்றே ஒரு சக்தி உள்ளது. நாங்கள் ஒரு வகையான மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லர். நாங்கள் வன்முறையில் காதல் கொண்டவர்களும் அல்லர். நாங்கள் மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்ற ஒரு அமைப்பின் உண்மையான போராளிகள்."

தமிழ் ஐக்கிய தினம் என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள இந்நினைவு நிகழ்வில் ரெலொ பாராளுமன்ற உறுப்பினர்கள் அடைக்கலநாதன், சிறிகாந்தா, சிவாஜிலிங்கம், ஆகியோரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனா ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்து உள்ளனர். இவர்களுடன் முன்னாள் ரெலோ உறுப்பினர்னளும் இந்நிகழ்வில் உரையாற்ற உள்ளனர்.

வரலாற்றுப் புண்ணை மீண்டும் பிரேத பரிசோதணை செய்வதல்ல, வரலாற்றை பின் நோக்கிப் பார்த்து அதே தவறுகள் மீண்டும் இடம்பெற்று விடாமல் வரலாற்றை முன்நோக்கி நகர்த்துவதே இந்நிகழ்வின் நோக்கம் என ஏற்பாட்டாளர்களில் ஒருவரான ரி சோதிலிங்கம் லண்டன் குரலுக்குத் தெரிவித்தார்.

வி.புலிகளுடன் சுமூகமான உறவைப் பேணிக்கொண்டு அவர்களது வரலாற்றுத் தவறுகளை கண்டிக்கவும் விமர்சிக்கவும் வேண்டிய ஒரு இக்கட்டான நிலையில் ரெலோ பா உ க்கள் உள்ளனர். இந்நிகழ் வில் கலந்து கொள்ளாமல் ஒதுங்குவது ரெலோ பா உ என்ற அடையாளத்திற்கு ஆபத்தானதாகவும் ஆதரவுத் தளத்தை ஆட்டம் காணவும் வைக்கும். எது எப்படி ஆயினும் மே 6ல் இவர்கள் பலராலும் உன்னிப்பாக அவதானிக்கப்படுவார்கள் என்பது மட்டும் உறுதி.

*ஏன் சைவ ஆலயங்கள்: இலகுவாக வருவாயிட்டும் தொழில் துறை, சமூக அந்தஸ்து, எப்படியும் நிர்வகிக்கலாம், நாட்காட்டிகளை பின்பற்ற வேண்டியதில்லை, யார் கேள்வி கேட்டாலும் எல்லாம் அவன் செயல் என்று சொல்லலாம்.*

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# நீங்கள் உங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதைப் பற்றி எண்ணுகிறீர்களா ? எங்களுடன் பேசுங்கள்.

# எங்களால் உங்களுக்கு உதவ முடியும்.

- ☐ நாங்கள் உங்கள் விமானச் சீட்டைப் பெற்றுத் தருவோம்
- ☐ நாங்கள் உங்களுக்கு இங்கும் அங்கும் ஏற்படும் உள்நாட்டு பயணச் செலவை வழங்குவோம்
- ☐ நாங்கள் உங்களுக்கு வேண்டிய பயண ஆவணங்களைப் பெற்றுத்தர உதவுவோம்
- ☐ நாங்கள் உங்களை வழியனுப்பி வைப்பதிலும் வரவேற்பதிலும் உதவுவோம்

## தஞ்சம்கோரியோர்

யு.கே இல் இருந்து உங்கள் நாட்டிற்கு சுயவிருப்பில் திரும்பிச் செல்வதற்கு

## 31 மே 2007

திகதிக்கு முன் விண்ணப்பித்தால்

## £3500

பெறுமதியான மீள்இணைவு உதவியை திரும்பும் ஒவ்வொருவரும் பெறமுடியும்.

முக்கிய குறிப்பு : யூன் 2007ல் விண்ணப்பித்தால் இந்த உதவித் தொகை £2500 ஆக குறைக்கப்படும். யூன் 2007க்கு பின் வரை காத்திருந்து விண்ணப்பித்தால் உங்களுக்கு வழமையான ஒருவருக்கு £1000 பெறுமாதியான மீள்இணைவு உதவி மட்டுமே கிடைக்கும்.

மேலதிக விபரங்களுக்கு ஐ ஓ எம் இன் இலவச தொலைபேசி இலக்கத்திற்கு அழையுங்கள் 0800 783 2332



ஐ ஓ எம் ஒரு சுயாதீன சர்வதேச அமைப்பு. இது பிரித்தானிய அரசின் ஒரு பிரிவல்ல.
நீங்கள் விரும்பினால் மட்டுமே, நீங்கள் உங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல நாங்கள் உதவுவோம்.

IOM International Orgnization for Migration
0800 783 2332 - www.iomlondon.org

This programme is co-funded by the European Refugee Fund

21 Westminister Palace Gardens
Artillery Row, London SW1P 1RR
Tel: 020 7233 0001
Fax: 020 7233 3001
www.iomlondon.org